RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s217

# வில்லிபாரதத்தில் நாகவழிபாடும் நாகர்களும்

**சி. லலிதா** [அ, *]

[அ] தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு, இந்தியா.

# Naga Worship and Nagas in Villibharata

**C. Lalitha** [a, *]

[a] School of Tamil Studies, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India.

* Corresponding Author: lalitha20051990 @gmail.com

Received: 04-01-2021
Revised: 11-04-2021
Accepted: 17-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

The ancients thought that snakes had a unique power to kill because of their venomous nature. That is why serpents are worshiped as gods. The people who worship are called Nagas. Later they were portrayed as cobra-shaped men. The Aryans captured their place and the war arises. In mythology, epics and religions, the practice of combining snakes is found in many parts of the world. Later this worship is linked to religion. However, in Villibharata, countless Nagas have been destroyed. Over time, Naga worship and Nagas have been changing in various understandings with various religions and changing according to the situation.

**Keywords:** Worship, Villibharata, God, Nagas, Snake

## முன்னுரை

நாகம் குறித்த தொன்மங்கள் உலகளாவிய பொதுத்தன்மையில் பரவியுள்ளது. பல்வேறு பழங்குடியினர் தொடங்கி நாகரீகவயப்பட்ட மனித சமூகங்கள் வரை நாக வழிபாடு சார்ந்த மரபாக பரவியுள்ளது. பழம்புராணங்கள், புனிதநூல்கள் பலவற்றிலும் நாகம் குறித்த பதிவுகள் இடம்பெறுகின்றன. அத்துடன் நாக வழிபாடும் ஒரு பெரும் காலசாரப் பாரம்பரியமாக உலகின் பல பகுதிகளிலும் பரவியுள்ளது. இந்தியாவில் நாக வழிபாடு காலம்தோறும் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது. உதாரணமாக இந்துக் கடவுளான சிவன் கழுத்தில் வாசுகி என்ற நாகத்தினை அணிந்திருப்பார், விஷ்ணு ஆதிசேசன் என்ற ஐந்து தலை நாகத்தின் மீது சயநித்திருப்பார். அத்துடன் நாட்டார் வழிபாட்டிலும் நாகவழிபாடு பரவலாக இருப்பதைக் காணமுடிகிறது. குறிப்பாக இது பண்டைய இயற்கை வழிபாடுகளில் ஒன்றாகவும் மற்றும் மதங்களில் காணப்படும் வழிபாடாகவும் இருந்து வருகின்றது. புராண இதிகாசங்களிலும் இந்திய பண்டைய நூல்களிலும் நாகவடிவத்தின் முக்கியத்துவம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. சிந்துசமவெளி நாகரிக காலக் கண்டுபிடிப்புகளில் முக்காலி மீதுள்ள கிண்ணமும் அருகில் காணப்படும் நாக வடிவமும் நாக வழிபாட்டின் தொன்மைக்குச் சான்றாக கருதப்படுகிறது. நாக வம்சத்தினரை நாக வழிபாட்டுடன் இணைத்துக் காட்டும் செய்திகளும் உள்ளன. அந்தவகையில் வில்லிபாரத்தில் இடம்பெற்றுள்ள நாகவழிபாடு மற்றும் நாகர்கள் பற்றி ஆய்ந்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## நாக வழிபாடு

கடவுள் நம்பிக்கை, வழிபாடு ஆகியவற்றைப் பார்த்தோமேயானால், அவை அச்ச அடிப்படையிலும், அன்பு அடிப்படையிலும் தன்னிச்சையாகத் தோன்றித் தழைத்திருத்தல் வேண்டும். அன்பு காட்டுவனவற்றிற்கு நன்றி காட்டுவதும், அச்சம் ஊட்டுவனவற்றிற்கு அடிபணிவதும் மனித இயல்பாகும். அந்தவகையில் நாக வழிபாட்டின் தொடக்கமாக ந.சி.கந்தையா பிள்ளை அவர்கள் "பண்டைக்கால மக்கள் கூட்டத்தினர் ஒவ்வொருவரும் தம்முள் காணப்பட்ட முக்கிய தன்மை ஒன்றை விளக்கும் முகமாக ஏதேனும் ஒரு குறியை ஓர் ஓவியத்தை வணங்கியிருக்கலாம். அது பிற்காலத்தில் அம்மக்களால் வழிபாட்டுக்குரியதாக ஆகியிருக்கலாம். நாக வழிபாட்டின் தொடக்கமும் இப்படியே இருக்கலாம் எனக் கருத இடமுண்டு" என்று பதிவு செய்துள்ளார். பாம்பு பற்றிய செய்திகளாக அபிதான சிந்தாமணியில் "பாம்பு - ஒரு விஷமுள்ள ஊர்ந்து செல்லும் பிராணி. இவைகளில் சிறு பெருவிஷமுள்ளவை. சில சிறுவிஷமுள்ளவை. இவை உருண்டு நீண்டு பிளவுபட்ட நாவினையுடையவாய். கண்ணே செவியாகவுடையன. இவை ஆடிமாதம் கருக்கொண்டு கார்த்திகையில் பொரிக்கும். இவை 200 - க்கு மேல் முட்டையிடும். அவற்றிற் சில கெடும். இவை பிறந்த 10 நாட்களில் ஆதித்தனை நோக்கிப் பார்க்க மேற்பற்கள் நான்கிலும் விஷமூறும். இப்பற்களுக்கடுத்த பாகத்தில் விஷப்பையுண்டு. அவ்விஷத்தைப் பற்களிலுள்ள துவாரத்தின் வழியாய் விஷத்தையூற்றும். பிறந்த 60 நாட்களில் தோலுரிக்கும். 120 வருஷம் வாழ்ந்தபின் உடல் தேய்ந்து குறுகும். இவற்றின் வேகங்களை வாயுவேகம், வருணவேகம், அங்கிவே கங்களிலடக்கிப்பத்துக் கூறுவர். இவை, பூமியிலுண்டாம் கால்களில்லாத புழு இனங்களில் திருந்தியவை. தலையும் வாலும் குறுகி உடல் பருத்து நீண்டிருக்கும். சில 100 அடிகள் நீண்டவை. முட்டைகள் பாம்பினத்திற்குத் தக்கவுருவத்தினையும் நிறத்தினையும் பெற்றிருக்கும். நாக்குப் பிளவுபட்டது. வருஷத்திற்கு இருமுறை சட்டையுரிப்பவை" என்று ஆ.சிங்காரவேலு முதலியார் (அபிதான சிந்தாமணி: ப.1312 - 1313) குறிப்பிட்டுள்ளார். நாகங்கள் தெய்வீக சக்தியுள்ள தேவதைகளாக கருதப்படுகின்றன. ஆண் பாம்புகள் நாகர்கள் என்றும் பெண் பாம்புகள் நாகினிகள் என்றும் அழைக்கப்படுகின்றன. நாகங்களை சர்ப்பம் என்றும் அழைப்பர். தேவர்களும் அசுரர்களும் தேவாமிர்தத்தைப் பெற திருப்பாற்கடலில் மந்திர மலையை நிறுவி கடைவதற்கு நாகத்தினைக் கயிறாகப் பயன்படுத்தினர். நாகர்களின் இருப்பிடம் பாதாளலோகம் எனப்படுகிறது. "தங்கள் மரபுச் சின்னங்களுக்கு மரியாதையும் வழிபாடும் செய்த நாகச் சின்னத்தைப் போருக்குப் புறப்படும் போதும் அமைதியில் திளைத்திருக்கும் போதும் கொடியாகப் பயன்படுத்தினர். இவர்கள் பாம்புகளுக்கு எவ்விதத் தீங்கும் செய்வது இல்லை. அதுபோல் பாம்புகளும் தங்களுக்கு எவ்விதத் தீங்கும் செய்யாது என நம்பினர். நாகர்களைப் பற்;றிய புராணக் கதைகள் இந்தியாவின் அனைத்து மொழிக் கதைப்பாடல்களிலும் காணப்படுகின்றன" சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளதை சிவ.விவேகானந்தன் (Vivekanandhan, 2010) குறிப்பிட்டுள்ளார். நாகா என்ற சொல் மரம் மற்றும் பாம்பு வழிபாட்டு முறைகளில் இருந்து தோன்றி இருக்கலாம். இம் மதக்கோட்பாடு பழங்கால இந்தியாவில் பெருமளவில் பரவி இருந்திருக்க வேண்டும். நாகா என்ற சொல் மரபுகளின் ஒரு குறியீடாக, சின்னமாய் முக்கியத்துவம் பெற்றிருக்க வேண்டும். ஒவ்வோர் ஆதியினமும் ஏதோ ஒரு குறியை அடையாளமாகக் கொண்டு ஆதிகாலச் சமதாய மரபுச்சின்னங்களின் வலைப் பின்னலாக இயங்கி வந்துள்ளது எனலாம்.

## வில்லிபாரதத்தில் சர்ப்பயாகக் கதை

இந்தியாவில் வேதகாலத்திற்கு முன்பாகவே பாம்பு வழிபாடு இருந்துள்ளது. ஆரியர்கள் இந்தியா வருவதற்கு முன்பே பாம்பு வழிபாடு சிறந்து விளங்கியது என்பதற்குச் சிந்துவெளி நாகரிகம் சிறந்த சான்று தருகிறது. நாகர்களின் நாகரிகம் இந்து மதத்திற்குள் இணைந்த பின் இந்தோ-ஆரியர்கள் பல பாம்புகளைத் தங்கள் தெய்வங்களுடன் சேர்த்துக் கதைகூறும் போக்கு காணப்பட்டிருக்கிறது. எனவே ஷிலானனின் மகன் தட்சகன், ஐராவதனின் மகன் திருதராஷ்டிரன் என்னும் இரு சர்ப்பங்களை அதர்வண வேதம் குறிப்பிடுகிறது. ஐராவதன், திரதராஷ்டிரன், தட்சகன், அசுவசேனன், வாசுகி, கார்க்கோடகன் முதலான பல நாகர்களைப் பற்றி மகாபாரதம் பேசுகின்றது. காண்டவ வனத்து நாகர்களது தலைவனான தட்சகன் ஆரிய மன்னர் பலருக்கு நண்பனாக விளங்கினான். காண்டவ

வனத்தைக் கண்ணனும் அர்ச்சுனனும் எரித்தபோது இந்திரன் அதைத் தடுக்க முயன்றான். இந்தக் கதைக் குறிப்பு தட்சகன் ஆரியர் நட்பை அறிய உதவுகின்றது. காண்டவ வனத் தகனத்தில் நாகர் பலர் மாய்த்த போதும் தட்சகன் உயிர் தப்பினான். அர்ச்சுனனின் பேரனான பரீட்சித்து மன்னனைத் தட்சகன் என்ற நாக அரசன் கொன்றான். இது பாண்டவர் வம்சத்தைத் தட்சகன் பழிவாங்கியதைக் குறிக்கும். பரீட்சித்தின் மகன் ஜனமேஜயன் நீண்டகாலம் நாகர்களுடன் போரிட்டு ஆயிரக் கணக்கானவர்களைக் கொன்றொழித்தான். இதனை உணர்த்துவதே சர்ப்ப யாகக் கதை.

## வில்லிபாரத்தில் நாகங்களும் நாகர்களும்

வில்லிபாரதத்தில் இடம்பெற்றுள்ள காண்டவ வன தகனச் சருக்கம் ஆரியர்க்கும் நாகர்க்கும் நடந்த போர் என்றே கூறல் வேண்டும். அர்ச்சனன் கிருஷ்ணனின் உதவியால் காண்டவ வனத்தில் இருந்த நாகர்களை எரித்துக் கொன்றான். காண்டவ வனத்தின் வனப்பான இயல்பையும் அவ்வனம் பற்றி எரியும்போது இருந்த இயல்பையும் வில்லிபாரதம் சித்தரிக்கிறது. காண்டவ வனம் நெருங்கிய நால்வகை மரங்களும் பெரிய மலைக்கூட்டங்களும் நிறைந்தது. தன்னிடத்தில் வந்து சேர்ந்த அசுரர்கள், இராக்கதர்கள், பெரிய நாகர்கள் என்னும் இவர்களுக்கு இருப்பிடமாகவும் அமையப்பெற்றது. கூரிய நாகங்களையுடைய சிங்கங்கள் முதலிய பொடிய மிருகங்கள் மிகுந்தது மட்டுமன்றி தட்சன் என்னும் பெரிய பாம்பு வாழ்கின்ற காடு என்பதனை

“பிடைந்த நால்வகை மகீருகங் களும் நெடு
வெற்பினங் களும் துன்றி
அடைந்த தானவர் அரக்கர் உரகருக்கு
ஆலயங்களும் ஆகிக்
குடைந்து சோரி கொள்வாளுகிர் அரிமுதல்
கொடு விலங்கின மிக்குக்
கடைந்த கூர்எயிற்று ஆலதக் ககனும் வாழ்
கானனம் அது கண்டீர்” (வில்லிபாரதம்.768)

என இச்செய்தியை வில்லிபாரதம் குறிப்பிடுகின்றது. “நாகார்ஜுனாவின் சீடர் புத்த மதம் தழுவி மரவழிபாடு மற்றும் பாம்பு வழிபாட்டை ஏற்றுக்கொண்டார் என அவர் குறித்த கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. வழிபாட்டு மரத்தின் கீழ் (தல விருட்சம்) உள்ள லிங்கங்கள் பெரும்பாலும் நாக அல்லது நாகர்களின் பாதுகாப்பிலும் கவனிப்பிலும் உள்ளனவாகக் காணப்படுகின்றன” என சுப்பிரமணியன் குறிப்பிடப்பட்டுள்ளமையை சிவ.விவேகானந்தன் (Vivekanandhan, 2010) தன் நூலில் எடுத்துக்காட்டியுள்ள கருத்து பொருத்தமுடையதாக காணப்படுகிறது. காண்டவ வனத்தைத் தகனம் செய்த போது வயிரமுள்ள மூங்கில்களின் துவாரங்களில் எல்லாம் காற்றுப் பரவதால் ஒலித்தெழுகிற ஏழு வகைச் சுரங்களையும் கேட்டு அவற்றிற்கு மனம் கரைந்து உடம்பில் மயிர்ச்சிலிப்பு உண்டாக, அந்த இசையை உணவாகக் கொள்ளும் அசுணம் என்ற பறவைகள் தீப்பிழம்பு சுடுதலால் மூங்கில்கள் வெடித்து எழுகிற கடும் ஓசையினால் இறந்தன. அவை ஊழியில் மேகங்களின் இடியோசையினால் இறக்கின்ற நாக சாதியாரின் கூட்டங்களை ஒத்தன. இச்செய்தியை

“காழுடைப் புறக்கழைகளின் துளைதோறும்
கால்பரந்து இசைக்கின்ற
ஏழிசைக்கு உளம் உருகி மெய்புளகு எழ
இரைகொளும் அசுணங்கள்
தாழ் அழல் சுடர்சுடச்சுட வெடித்து எழ

சடுல ஓசையின் மாய்ந்த

ஊழியின் புயல் உருமினால் மடிந்திடும்

உரகர்தம் குலம் போன்ற" (வில்லிபாரதம்.783)

என விவரிக்கிறது வில்லிபாரதம். திரிபுரங்களைச் சிவபெருமான் கோபித்து எரித்த காலத்தில் அந்தப் பெருந் தீயிலிருந்து மூன்று அசுரராவது தப்பிப் பிழைத்திருப்பர். ஆனால் இக்காண்டவ வனத்தை எரித்த காலத்தில் இதில் வாழ்ந்த அசுரரில் தப்பிப் பிழைத்தவர் எவருவிலர். எல்லா அசுரரும் இறந்துபட்டனர் என கூறப்படுகின்றன. நாகர்களும் தங்கள் தலைகள் பலவற்றிலும் நெருப்புபற்றிச் சுடுதலால் தங்கள் வாயிலுள்ள விஷங்களே தங்களைக் கொன்றாற் போல இறந்து விழுந்தார்கள் என்பதைக் கீழ்வரும் செய்யுள் சித்திரிக்கிறது.

"முப்பரங்களை முக்கணன் முனிந்த நாள்

மூவர் அம் முழுத் தீயில்

தப்பினார்உளர் காண்டவம் அடவி வாழ்

தானவர் யார் உய்ந்தார்

பைப்புறத் தணி மணியொளி பரந்தெனப்

பஃறலை களிற் பற்றி

வெப்புறுத்தலின் உரகரும் தங்கள் வாய்

விடங் கொன்றென வீழ்ந்தார்" (வில்லிபாரதம்.787)

இந்து மதக் கோட்பாட்டின்படி கடவுளர்களின் உருவத்திலும் பாம்பு அடையாளத்தைக் காணலாம். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியனவற்றைத் தொழிலாகக் கொண்டிருக்கும் இறைவர்களிடம் பாம்பு காணப்படுவதால் மக்கள் பாம்பை வணங்குகிறார்கள் என்று கூறலாம். "பாம்பைக் கழுத்தில் அணிந்து கொண்டு சிவன் கோபம் மீதூர நடனமாடும் காட்சித் தோற்றம் ஒரு பொது உலகை அழித்ததன் எச்சமாக எண்ணப்படுகிறது. எனவே, பாம்பு இறப்பிற்கு உரிய ஓர் உருவகமாகக் கொள்ளப்படுகிறது. அழித்தல் முடிந்து ஆக்கல் சக்திக்கும் காரணம் என்று கூறுவதால் அதன் பிரதிபலிப்பாகவே கோவில்களில் லிங்கத்தையும் பாம்பையும் அமைத்துள்ளார்கள் என்று (Annamalai, 1966) பொ.மா.அண்ணாமலை கூறியுள்ளார். அர்ச்சுனன் விரைவாகச் செலுத்திய அம்புகள் சென்று நாகர்களின் முடிகளின் நுனிகளை உடைத்தலினால் உடைபட்டுச் சிதறி மேல் எழுந்த பொறிகளும் இந்திரனுடைய இருப்பிடத்திற்கு ஏற்றிய விளக்குகள் போல வானத்தில் பிரகாசித்து நின்றன. இதனை வில்லிபாரதம்,

"முந்திவார் சிலைக்கை பற்குனன் தொடுத்த

முரணுடைய மூரி வெங் கணைகள்

உந்திவாள் உரகர் குடிகா மகுட

கோடிகள் உடைத்தலின் உடைத்து

சிந்தி மீதெஐந்த மணிகளும் அனலின்

சிகைகளின் தெறித்தெழு பொறியும்

இந்திராலயத்துக்கு ஏற்றிய தீபம்

என்ன நின்று இலங்கின எங்கும்" (வில்லிபாரதம்.787)

எனக் குறிப்பிடுகிறது. அசுரர்களுடைய முப்புரங்களும் சாம்பராய்ச் சிதறும்படி கோபித்து எரித்த சிவபொருமான் தேவர்களான நமது நகரத்தையும் எரிக்கும்படி கோபம் கொண்டனன் போலும் என்று எண்ணி தேவர்கள் பயந்து நடுக்கமடைய, இந்திரனும் காட்டில் உள்ளோருடனே தட்சகன் என்னும் பாம்பும் அழிந்திடுமே என்று சிந்தித்து மனம் தளர்ந்து உருகினான் என்பதை வில்லிபாரதம்

“தானவர் புரங்கள் நீறெழ முனிந்த

தமனியச் சிலைக்கை வெள்ளூர்தி

ஆனவன் நமது புரத்தையும் சுடுவான்

அழன்றனன் போலும் என்று அஞ்சி

வானவர் நடுங்க வானவர்க்கு தளர்ந்து

வலாரியும் மனனுறத் தளர்ந்து

தானவர் உடனே தக்ககன் என்னும்

கட்செவி கெடும் எனக் கரைந்தான்” (வில்லிபாரதம்.791)

என கூறுகின்றது. மேலும் வில்லிபாரதம் மணிமதன் என்கிற ஒரு நாகரைக் குறிக்கிறது. “காலங்காலமாக பாம்புகளின் தலையில் நவரத்தினங்கள் உள்ளன என்கிற நம்பிக்கையைச் சுட்டுவதாக இருக்கலாம். தக்சகன் மற்றும் வாசுகிப் பாம்புகளின் வழித்தோன்றல்கள் மற்றும் தான்தோன்றித்தனமாக அலைந்து கொண்டிருக்கும் பாம்புகளின் தலைகளில் ஒளிருகின்ற நீலநிற முத்துகள் காணப்படுகின்றன என்று வராகமிரா கூறுவதாக சிவ.விவேகானந்தன் (Vivekanandhan, 2010) குறிப்பிட்டுள்ளார். எனவே இது பழமையான நம்பிக்கை எனக் கொள்ளலாம். வில்லிபாரதத்தில் போகவதிப்புரத்தில் தங்கியிருக்கும் ஆயிரக்கணக்கான நாகர்கள் இயற்கையாகவே வலிமையும் தீவிரமும் உடையவர்கள் என கூறப்படுகிறது. நகை, ஸ்வஸ்திகம், சக்கரங்களால் அலங்கரிக்கப்பட்டவர்கள். மங்கலகரமான கமண்டலத்தைத் தாங்கியவர்கய் சிலர் இரு ஐந்து தலைகளுயும் மற்றவர்கள் ஏழு முகங்களையும் உடையவர்களாக சித்தரிக்கப்படுகின்றனர். “நாகர்களின் மதமாற்றத்தின் நிரந்தரச் சாட்சியாய் புத்தரின் உருவங்களுக்கு மேலுள்ள நல்ல பாம்பின் படம் அமைகிறது. புத்த மத்தின் முத்திரை வழிபாடு நாகர்களின் மூதாதையர்களின் வழிபாட்டின் இருந்தே தோன்றியது. மூதாதையர் வழிபாட்டு முறைகளும் பாம்பு வழிபாட்டு முறைகளும் சைவமத வழிபாட்டு முறைகளும் புத்தர் காலத்திலேயே ஒன்று கலந்து விட்டன என்று சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளதை சிவ.விவேகானந்தன் (Vivekanandhan, 2010), குறிப்பிட்டுள்ளார். தேவர்கள் தட்சகன் என்னும் நாக அரசனைக் கூவி அழைத்தனர். அவனைத் தேடிக்கொண்டு அர்ச்சுனன் அமைத்த சரக்கூடத்தைச் சூழ்ந்து திரிந்தனர். அப்போது தட்சகனுடைய மனைவி தனது சிறுநாகக் குட்டியை வாயில் கவ்விக் கொண்டு தப்பிப் பிழைப்பதற்காக வானத்தில் பறக்க எழுந்தாள். அப்பொழுது, அர்ச்சுனன் அந்த நாக மாதின் தலையை அம்பினால் துணிந்து வீழ்த்தினான். இதனை வில்லிபாரதம்,

“தக்கன் தன்னைக் கூயினர் தேடிச்

சாயக மண்டபம் சுற்றி

மிக்க விண்ணவர்கள் திரிதர அவன்தன்

மெல்லியவ் மகவையும் விழுங்கி

அக்கணம் தன்னில் அந்தரத்து எழலும்

வீழ்த்தினான் அம்பினால் துணித்துச்

செக்கனல் உருவச் சென்னியை உரகர்

கன்னியைத் திருமணம் செய்தான்” (வில்லிபாரதம். 802)

எனக் குறிப்பிடுகிறது. அருச்சுனன் தன் உடன் பிறப்புகள் மற்றும் மனைவியுடன் காட்டில் மறைந்து வாழும் காலத்தில் உலுபி என்னும் நாகர் குலத்துப் பெண் ஒருத்தியுடன் மணஉறவு கொண்டான். அருச்சுனன் நாக கன்னியை மணம் புரிந்ததை,

“நரகதிரும் பூவுலகில் நாகராசன் நன்மகளாம்

நாக கன்னி யென்னுமந்த நாயகியை மணம் புணர்ந்து (அல்லிகதை.அடிகள்.23-24)

என அல்லிகதை கூறுகின்றது. அர்ச்சுனனால் காண்டவ வனம் பற்றி எரியும் போது நாகர்கள் பெரும் மழையை வனத்தின் மேல் பொழியச் செய்தனர் (Sundaramoorthi, 1989). மழைநீர் காண்டவ வனத்தில் பொழிந்து, நாகர்கள் தப்பா வண்ணம் அர்ச்சுனன் காண்டவ வனத்தின் மேற்பகுதி எங்கும் சாரக்கூடாரத்தைக் கட்டிவிட்டான். இப்பாரத நிகழ்ச்சி நாகர்தம் பிற வரலாறுகள் மெய்ப்பிக்கின்றன. நாகர்கள் மழையைக் கட்டி ஆண்டனர். தாம் விரும்பும்போது மழையைப் பொழியச் செய்யவும் அழை பெய்யாமல் தடுக்கவும் ஆற்றல் பெற்றிருந்தனர். நாகர்கள் பலகலைகளில் திறமை உடையவர்களாக இருந்தனர். ஆரியர்கள் முதன் முதலில் எழுத்துக்கலையைக் கற்றது நாகர்களிடமிருந்து தாம் என்பர் அறிஞர். "ஆரியர்களுக்குச் சமஸ்கிருத எழுத்தை முதன்முதலில் உருவாக்கித்தந்தவர்கள். நாகரிகம் கற்பித்தவர்கள் நாகர்களே என்பர் அறிஞர்கள். சமஸ்கிருத எழுத்துகள் இக்காரணத்தாலேயே தேவநாகரி என அழைக்கப்படுகின்றன. சந்திரனது வளர்பிறை தேய்பிறை அடிப்படையில் நாட்களைக் கணக்கிடும் முறையைக் கண்டதும் நாகர்களே என்பர். நாhகர்களின் கடவுள் வணக்கம் நாக வழிபாடு ஆகும். உலகெங்கும் நாக வழிபாட்டைப் பரப்பியவர்கள் நாகர்கள் ஆவர். கேரளத்தில் பாம்பு வழிபாடு தேன்றி சிறப்புற்றிருப்பதற்கு இக்கருத்து சான்று பகரும். கேரளத்துப் பாம்பு மேக்காட்டு நம்பூதிரிகள் என்று கூறப்படுபவர்கள் பழங்காலத்து நாகர் இனமக்களே ஆவர்" (Rajanayagam Mudhaliyar, 1986) என்று முதலியார் செ.இராசநாயகம் (Rajanayagam Mudhaliyar, 1986) கூறப்பட்டுள்ளது.

## முடிவுரை

இதன்வழி இந்தியா முழுவதிலும் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், கோவில் குருக்கள், மருத்துவ, மந்திர சோதிட வல்லுநர்களாக உள்ள மக்கள் யாவரும் நாகர்கள் என்று கருத இடமளிக்கிறது. ஆரியர்களின் பரவல் முதன்முதலில் செந்தமிழ் பரவாத இடங்களில் நிகழ்ந்திருக்க கூடும். தமிழகத்தின் வேலியாய் அமைந்திருந்த நாகர்கள் இத்தாக்குதலுக்கு உட்படுத்தியிருக்க வேண்டும். இக்கரணங்களால் நாகர்கள் மதிப்பில் குறைத்து அமைக்கப்பட்டனரே தவிர அவர்களது பண்பாட்டில் மாறிவிடவில்லை. இவ்வாறு நாக வழிபாட்டின் தொன்மை மற்றும் வில்லிபாரத்தில் நாகர்கள் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

## References

Annamalai, P.M., (1966) Snakes, Tamil publishing corporation, Chennai, India

Kandhaiya pillai, N.S., (1957), Prehistoric Ancient Tamils, Kazhaga Veliyedu, Chennai, India

Naraya Velupillai, (2006), Villibharatham, Poompukar pathippagam, Chennai, India

Rajanayagam Mudhaliyar, S., (1986), Jeffna history, Asian Educational Service, Newdelhi, India

Sundaramoorthi, E., (1989) Alli Stories, Madras Unievrsity, Chennai, India

Vivekanandhan, S., (2010), Nagar History, Kavya publishing, Chennai, India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License